



# COLLEGE DAY
# &
# PRIZE DAY - 2007
# PRINCIPAL'S REPORT

***CHIEF GUEST:***

*Prof. P. Balasuntharampillai*
*Former Vice Chancellor*
*University of Jaffna.*

**VELANAI CENTRAL COLLEGE**
**VELANAI**
**01.11.2007**

# எமது கல்லூரியின் அதிபர்கள்
# (1945 – 2002)



A.K. Kandiah
(1945-1950



V. Thampoe
(1950-1963)



A.T. Sabaratnam
(1963-1965)



K. Sivasithamparam
(1965--1967)



J.S. Ariyaratnam
(1967--1971)



V. Ponnuthurai
(1971May-1971Dec)



V. Rasanayakam
(1971--1973)



S. Thiyagarajah
(1973--1974)



C. Gunabalasingam
(1974--1982)

# J/ Velanai Central College

**Motto**

**Lead kindly light**

**Vision**

**To become a leading School**

**Mission Statement**

*To work for the uplift of the school making maximum use of all available resources, for the advancement of the people of this island's towards the highest reaches of global education in keeping with national aims, to face the challenges in a changing world to build up human resources and a balance Personality, Capable of fostering human values, Social justice and national Sentiments.*

# Prize day - 2007

**President**

Mr. P. Arunagirinathan, B.A(Hons Dip. in Edu. M.Ed SLPS-1

**Chief Guest**

Prof. P. Balasunthampillai

(Emiritus vice chancellor University of Jaffna)

**Venue**

J/Sir. Waithiyalingam Duraiswamy

Assembly hall

J/ Velanai Central College

01.11.2007

Thursday

at 9.30

# நிகழ்ச்சி நிரல்

- முதன்மை விருந்தினரை அழைத்து வரல்
- ஆலய வழிபாடு
- பாடசாலைக் கொடியேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- இறை வணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை
- தலைமையுரையும் அதிபர் அறிக்கையும்
- முதன்மை விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- கலை நிகழ்வு
- நன்றியுரை

# அதிபர் அறிக்கை

கல்லூரித் தினமும், பரிசளிப்பு விழாவும் கொண்டாடப்படுகின்ற இவ்வேளையில் எங்கள் கல்லூரிக்குத் தன் இன்னருளை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் எமது குல தெய்வமாக நல்லருளை எல்லோருக்கும் பாலிப்பவர்களாகிய சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமான் திருவடிகளைப் பணிந்து வணங்கி இவ்வாண்டுக்கான அதிபர் அறிக்கையை உங்கள் அனைவரது முன்னிலையிலும் சமர்ப்பிக்கின்றேன்.

இவ்வாண்டுக்கான பரிசளிப்பு விழா முதன்மை விருந்தினர் அவர்களே!
அவர்தம் பாரியார் அவர்களே!

வலயக், கோட்டப் பணிப்பாளர் அவர்களே!

பிரதி, உதவிக் கல்விப் பணிப்பாளர் அவர்களே!

அலுவலக உத்தியோகத்தர்களே, துணை ஆளணியினரே!
ஆசிரிய ஆலோசகர்களே!
பழைய மாணவர் சங்கச் செயலாளர் மற்றும் உறுப்பினர்களே!
பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் மற்றும் உறுப்பினர்களே!
கல்லூரியின் உயர்வுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் ஆசிரியப் பெருந்தகைகளே!

கல்லூரி முகாமைத்துவ அலுவல்களில் பங்குகொண்டு உழைத்துவரும் கல்விசாரா உத்தியோகத்தர்களே!

சகோதர பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, அன்புக்குரிய பெற்றோர்களே!
இனிய மாணவச் செல்வங்களே,
பெருமைக்குரிய நண்பர்களே

உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்பதுடன் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## வரலாற்று நோக்கில்

இலங்கையின் கல்வி வரலாற்று வளர்ச்சிப் போக்கில் 1945இல் "மத்திய கல்லூரிகளின்'' தோற்றம் கிராமப்புற மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இலவசக் கல்வியின் தந்தை எனப் போற்றப்படுகின்ற C.W.W கன்னங்கரா அவர்களின் சிந்தனையில் உதித்த இக்கருவூலம் 54 மத்திய கல்லூரிகள் இலங்கை முழுவதிலும் தோற்றம் பெற்றது.

இவற்றுள் ஒன்றே எமது கல்லூரியும். அரசின் மத்திய கல்லூரி என இக்கல்லூரிகள் அழைக்கப்பட்டன. சோல்பரி பிரபு அவர்களினால் அடிக்கல் நாட்டப்பட்டு இலங்கையின் பிரதமராக இருந்த சேர். ஜோன். கொத்தலாவல அவர்களால் திறந்து வைக்கப்பட்ட வரலாற்றுப் பெருமை கொண்டது எமது கல்லூரி.

எமது கல்லூரி வெறுமனே வேலணைப் பிரதேசத்திற்கு மட்டும் கல்வி வழங்கும் நிலையமாக ஆரம்பத்தில் அமையவில்லை. தீவுப்பகுதியின் அனைத்துப் பிரதேச மாணவர்களையும் உள்வாங்கும் கல்லூரியாக மிளிர்ந்தது. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்ற பொற்காலம் ஒன்று இக்கல்லூரியில் இருந்தது. இன்றும் விடுதியில் தங்கி இருந்து கற்ற மாணவர்கள் பேருவகையுடன் நினைவுகளை மீட்டிக் கொண்டு இருப்பது பலருக்கும் தெரியும். பல தவப் புதல்வர்களை உருவாக்கியது மட்டுமல்ல தன்னை, தனது கல்லூரியை, தான் பிறந்த மண்ணை, அம்மண்ணின் மக்களது வாழ்வின் உயர்வை, இன்று வரை சிந்தித்து அதற்காகப் பணியாற்றும் மிக உன்னதமான பழைய மாணவர் பரம்பரை ஒன்றைப் பிரசவித்துப் பெருமை கண்டவள் எம் கல்லூரி அன்னை.

இந்த அன்னையை இன்று அவளுடைய புதல்வர்கள் தங்கத் தாம்பாளத்தில் வைத்துப் போற்றுகின்றார்கள் என்றால் இக்கல்லூரியின் கல்விசார் விழுமியத்திற்கு வேறு கட்டியம் கூறத் தேவையில்லை. இதற்காகப் பழைய மாணவர்களின் கரங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து இறுகப் பற்றிக்கொண்டு தான் நான் இந்த மேடையில் உங்களுக்கு இந்த அதிபர் அறிக்கையைச் சமர்ப்பித்துப் பெருமை யடைகின்றேன். மனம் நிறைந்த பெருமித உணர்வோடு நானும் எனது கல்லூரிச் சமூகமும் உழைத்துக் கொண்டிருக்கின்றோம். உழைப்புக்கான அறுவடையையும் நாம் அண்மைக் காலத்துள் பெற்றுள்ளோம்.

பாலைவனத்துள் ஒரு பசுஞ்சோலை ஒன்றை நாம் படைத்து வருகிறோம். துன்பங்கள், துயரங்கள், சோதனைகள், வேதனைகள், கவலைகள் அத்தனைக்குள்ளும் எங்களால் எதிர்நீச்சல் போட முடிகிறது என்றால் அதுதான் எமது அர்ப்பணிப்புடன் கூடிய பங்கு கொள்ளல் இந்த சூழலுக்குள் வந்தால் எமக்கு உலகமே மறந்து விடுவது போன்ற ஒரு உணர்வு, அனைத்தையும் எதிர்கொள்ளும் உறுதியை ஆண்டவன் எமக்கு கொடுத்ததனால் தான் எமது கல்லூரி இன்று நிமிர்ந்து நிற்கின்றது. இதன் வளர்ச்சிக்காக உழைக்க அனைவரும் ஒன்றுபடுவோம்.

### முதன்மை விருந்தினர்

இன்று எமது கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு எமது

கல்லூரிக்குப் பெருமையையும், சிறப்பையும் பெற்றுக் கொடுத்த இம்மண்ணின் மைந்தரும், எமது கல்லூரி வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்டவருமான பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர் களை இம்மண்ணின் தலைசிறந்த கல்வி யியலாளனாகவும் இருக்கின்றார்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை யா/ கரம்பொன் சண்முகநாதன் வித்தி யாலயத்திலும்,யா/ புனித அந்தோனி யார் கல்லூரியிலும், உயர்தரக் கல்விக்களமாக யா/ இந்துக் கல்லூரி யிலும் கல்வி பயின்றார். இவர் தனது சிறு வயது முதல் புவியியல் பாடத்தில் பரிசில்களைப் பெற்றதுடன் அத் துறையில் சிறந்தும் விளங்கியவர். இவரது பல்கலைக்கழகக் கல்வி பேராதனை இலங்கைப் பல்கலைக் கழகத்திலே தொடர்ந்தது. பட்டப் படிப்பினைத் தொடர்ந்து 1965முதல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளநிலை விரிவுரையாளராகத் தொடங்கிய இவரது பணி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் தொடர்ந்தது. இங்கு புவியியற் துறைப் பேராசிரியராகவும், கலைப் பீடாதி பதியாகவும், பல்கலைக் கழகத்துணை வேந்தராகவும் உயர்ந்து வாழ்நாள் பேராசிரியர் எனும் பெருமையையும் பெற்று இன்றும் பணியாற்றி வரு கின்றார். இத்தகைய சிறப்புமிக்க இவர் எமது பிரதம விருந்தினராக வாய்க்கப் பெற்றமையால் எமது கல்லூரி பெருமையடைகின்றது.

## பழைய மாணவர் சங்கம்

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கமானது கல்லூரியினது அனைத்து செயற்பாடுகளிலும் மிகச் சிறந்த முன்னேற்றகரமான, அர்ப் பணிப்புமிக்க பங்களிப்பைச் செய்து வருகின்றமை யாவரும் அறிந்ததே.

கல்லூரியின் தாய்ச்சங்கப் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகப் பதவி வழியாக அதிபர் பொன். அருண கிரிநாதன் அவர்கள் வழிநடத்திக் கொண்டிருக்கின்றார். செயலாளராக ஓய்வுபெற்ற தபாலதிபர் திரு. க. நவரெத்தினம் அவர்களும்,பொருளா ளராக ஓய்வுபெற்ற தபாலதிபர் சி.த. மகாலிங்கம் அவர்களும் கடமையாற் றுகின்றனர். பழைய மாணவர் சங்கங் களின் உதவியுடன் எமது கல்லூரியில் பல பயனுள்ள செயற்றிட்டங்கள் முன்னெடுக் கப்பட்டு வருவதுடன் பல வெற்றி யினையும் பெற்றுள்ளது.

கல்லூரியினது பழைய மாணவர் சங்கக் கிளைகள் கொழும்பு, பிரான்ஸ், பெரிய பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளில் இயங்கி வருகின்றன. இவை கல்லூரிக்குப் பல்வேறு வடிவங்களில் உதவிகளை வழங்கி வருகின்றன.

### பழைய மாணவர் சங்கம் – கொழும்பு

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு.ச. சிறிரங்கநாதன் (பதில் தலைவர்) |
| செயலாளர் | :- | திரு. பொன். ஈசன் |
| பொருளாளர் | :- | திரு. K. குகசீலன் |

### உதவிகள்

- தம்பு ஞாபகார்த்தப் புலமைப் பரிசில் நிதியம்
- கல்லூரி சுற்றுமதில்
- மாணவர் கல்வி அபிவிருத்திக்கான காகிதாதிகள் கொள்வனவுக்கான உதவி

- ❧"எழுகதிர்" சஞ்சிகை வெளியீடு
- ❧கலைநிகழ்ச்சிகள் நடாத்தல்
- ❧சுனாமிப்பாதிப்புக்குள்ளான மக்களுக்கான உதவி
- ❧ஊடக விளம்பர அனுசரணை
- ❧கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளை கொழும்பில் மேடையேற்ற உதவியமை
- ❧கல்லூரி மாணவர் கல்விச் சுற்றுலாவின் போது உணவு அனுசரணை
- ❧மதிய உணவுத் திட்டத்துக்கான பொருட்கள் உதவி

## பழைய மாணவர் சங்கம் — பிரான்ஸ்

தலைவர் :-

திருமதி திலகவதி பரராஜசேகரன்

செயலாளர் :-

திரு. P. கந்தப்பிள்ளை

பொருளாளர்:-

திரு. K. கேதீஸ்வரன்

## கல்லூரிக்காக இச்சங்கம் ஆற்றிய பணிகள்:—

கணனிகள் - 05

- ❧பல்லூடக எறிகருவி
- ❧விசேட வகுப்புக்கான ஆசிரியர் கொடுப்பனவுகள்
- ❧போட்டோப் பிரதி இயந்திரம்
- ❧Fax இயந்திரம்
- ❧விளையாட்டு மைதானக் காணிக் கொள்வனவு 25பரப்பு
- ❧மாணவர்களுக்கான ஆங்கில அகராதிகள், ஆங்கிலப் புத்தகங்கள்
- ❧மதிய உணவு அனுசரணை - 2007 1ஆந் தவணை
- ❧தரம் 6 மாணவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கல்
- ❧வறுமைக் கோட்டின் கீழ் உள்ள க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கல்
- ❧சர்வதேச பழைய மாணவர் சங்கங்களுக்கிடையிலான இடைத் தொடர்பு வசதிகள்
- ❧"வித்தியாலயம்" மலர் வெளியீடு

## பழைய மாணவர் சங்கம் — கனடா

தலைவர் :-

திரு. A அரியரெட்ணம்

செயலாளர் :-

திரு. S. ஜெயானந்தசோதி

பொருளாளர் :-

திரு. K. சித்திரவடிவேல்

## சங்கம் ஆற்றிய பணிகள்

- ❧கல்லூரி மதில் அமைப்புச் செலவின் ஒரு பகுதியை வழங்கியமை
- ❧கலாதீபம்"தீவகத்தென்றல்" மலர் வெளியீடு
- ❧ஒன்றுகூடல் மண்டப மேடைத் திரைச்சீலை பொருத்துதல்

## பழைய மாணவர் சங்கம்— பெரிய பிரித்தானியா

தலைவர் :-

திரு. N. நாகேஸ்வரன்

செயலாளர் :-

திருமதி மேகலை இராஜேஸ்வரன்

## இச்சங்கம் ஆற்றிய பணிகள்:—

- ❧மதிய உணவு வழங்கலை ஆரம்பித் தமை 2005, 2006, 2007 (2ஆந் தவணை)
- ❧மதிய உணவுச்சமையல் பாத்திரங்கள் கொள்வனவு
- ❧குடிநீர், குழாய்நீர் விஸ்தரிப்புப் பணிகள்

♣ ஒன்றுகூடல் மண்டபத்துக்கான மின் இணைப்புப் பணிகள்

♣ "தரிசனம் நூல்' 'வெளியீடு

♣ மதிய உணவுக்கான நிதிசேகரிப்புக்கான ஒளி நாடா வெளியீடு - தோள் கொடுப்போம்

♣ சர்வதேச நாடுகளுக்கான ஊடக அனுசரணை

## பழைய மாணவர் சங்கம் — அவுஸ்திரேலியா

தலைவர் :-

திரு. M. கோவிந்தபிள்ளை

செயலாளர்:-

திருமதி கோசலை மோகனதாஸ்

பொருளாளர் :-

திரு. S. பரமேஸ்வரன்

### இச்சங்கம் ஆற்றிய பணிகள்

♣ ஞாபகார்த்தப் புலமைப்பரிசில் கொடுப்பனவுகள் (தரம் 6 - தரம்13)

♣ நூலகத்துக்கான நூல்கள் கொள்வனவு

♣ நூலகக் கட்டிடப் புனரமைப்பு

♣ நூலகத்திற்கான தளபாடக் கொள்வனவு

♣ மதிய போசன அனுசரணை

♣ விசேட வழிபாடு, அபிசேகம், பூசைப் பொருட்கள் வழங்கல்

♣ கல்லூரி ஆலய அபிவிருத்திக்கான உதவிகள்

### கனடாவாழ் எமது கல்லூரி மாணவர்களின் மதிய போசன அனுசரணை 2007 3ஆந் தவணை

01. திரு. வில்வராஜா கணபதிப்பிள்ளை
02. திரு. இளந்திரையன் கந்தசாமி
03. திரு. இளமுகிலன் கந்தசாமி
04. திரு.ஸ்ரீபவன் சோமசுந்தரம்
05. திரு. விஜிகரன் புண்ணியமூர்த்தி
06. திரு. குமாரராஜா நடராஜா
07. வேலணை மக்கள் அமைப்பு
08. திரு. சண்முகானந்தன் இராஜரெட்ணம்
09. திரு. ஞானேஸ்வரன் கனகசபாபதி
10. இரட்ணம் ஜெயராணி
11. இரட்ணம் பூரணம்
12. திரு. லோகநாதபிள்ளை உதயகுமார்
13. திரு.லோகநாதபிள்ளை வசந்தகுமார்
14. முருகேசபிள்ளை அருள்மொழி
15. திரு. தர்மலிங்கம் இலங்கேஸ்வரன்
16. திரு.ஜெயகுமார் சுரேந்திரன்
17. திரு.பொன்னம்பலம் பத்மராஜா
18. கந்தையா ஜெயராணி
19. திரு. மோகன்
20. திரு. மகேஸ்வரன் இரட்ணசபாபதிப்பிள்ளை
21. திரு. மகேந்திரன் இரட்ணசபாபதிப்பிள்ளை
22. திரு. ரகுஞானம் கந்தசாமி
23. திரு. காந்தன் முத்துலிங்கம்
24. திரு. குலேந்திரன் ஆறுமுகம்
25. திரு.சுந்தரராஜா ஆறுமுகம்
26. திரு. செல்வஞானம் கந்தசாமி
27. திரு. இரட்ணம் கிருஷ்ணா
28. திரு. துரைராஜா செல்வன்
29. திரு. துரைராஜா ராஜன்
30. திரு.மெய்கண்டதேவர் ஏரம்பு
31. திரு. செல்வநாதன் மதிநாதன் சண்முகம்

திரு. பா.செல்வநிதிநாதன் (பாலா-செல்வம் கனடா)

மேற்படி மதிய போசன உதவிக்காக நிதி சேகரிப்பில் பங்குகொண்டு முன்னின்று உழைத்த எமது அன்புக்குரிய பழைய மாணவர் திரு. இராஜரெட்ணம் சண்முகானந்தன், திரு. குமரையா நடராஜா திரு.ஞானேஸ்வரன் கனகசபாபதி, திரு.மகேஸ்வரன் இரத்தினசப்பாபதிப்பிள்ளை ஆகியோருக்கு எமது கல்லூரிச் சமூகம் தனது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

## மதியபோசன உதவி வழங்கும் உள்ளூர் அன்பர்கள்

- ♣திரு. சுப்பிரமணியம்
- ♣திரு. சி.பரிபூரணன்
- ♣திரு.இ.தயானந்தன்
- ♣திரு. க. வரதராஜா
- ♣திரு. ச. ஸ்ரீரங்கநாதன்
- ♣சு. நமசிவாயம் குடும்பம்
- ♣திரு. த. சிறீசெல்வம்
- ♣திரு. இ. சிவசேகரன்
- ♣திரு. ச. சந்திரசேகர்
- ♣திரு. இ. யோகேஸ்வரன்
- ♣திருமதி ஆ. குமாரதாசன்
- ♣திரு.பொ. அருணகிரிநாதன்
- ♣திரு. த. கபிலநாதன்
- ♣திரு.க.ஜெயகரன்

## கல்வி அடைவுகள்

எமது கல்லூரியின் க.பொ.த. (சா/த), க.பொ.த (உ/த) பெறுபேறுகளில் அண்மைக் காலங்களில் ஒரு பெரு வளர்ச்சி காணப்பட்டமை பலரும் அறிந்ததே. இடப்பெயர்வு காரணமாக எமது கல்லூரியின் பெறுபேறுகளில் ஆரம்ப காலத்தில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டது. ஆனால் இன்று பெறுபேறுகளில் மிக உயர் வளர்ச்சிப் போக்கைக் காணக்கூடிய நிலை எமது வெற்றியாகும். பல்கலைக்கழகம், கல்விக் கல்லூரிகள் என்பவற்றுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை கடந்த 2004ஆம் ஆண்டுக்குப் பின் அதிகரித்துள்ள நிலையையும் காணலாம்.

இந்த நிலையை மேலும் அதிகரிக்கும், நோக்குடன் அதிபர் உட்பட ஆசிரியர் குழாமும் மிகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றிக் கொண்டிருக்கின்றனர். செயற்பட வேண்டியது எமது கடமையுமாகும்.

எமது கல்லூரியின் கல்விப் பெறுபேற்றினை அதிகரிப்பதற்காக நாம் பல விசேட செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். இருப்பினும் எமது இன்றைய சூழல் அதற்குப் பாதகமாகவே அமைந்துள்ளது.

## கல்லூரியின் தற்போதைய நிலை

எமது கல்லூரியில் தற்போது 560மாணவர்கள் கற்று வருகின்றனர். தரம் 6முதல் 13வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இவ்வருடம் தரம் 6இற்கான அனுமதி திருப்திகரமானதாக இல்லை. G.C.E O/L பரீட்சையில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெறும் மாணவர்கள் இங்கு தொடர்ந்து கல்வி கற்பதைத் தவிர்த்து வருகின்றனர். பெற்றோரும் இதனை ஆதரிப்பவர்களாகவே இருக்கின்றனர். எமது கல்லூரியின் மாணவர் எண்ணிக்கை திருப்தி தராமைக்கு இதுவே முக்கிய காரணமாகும்.

அதிக மாணவர்கள் வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்தில் இருந்தே தரம் 6இற்கு அனுமதி பெறுகின்றனர். ஏனைய பாடசாலைகளில் இருந்து அனுமதி பெறும் மாணவர் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே உள்ளனர். இதுவும் எமது கல்லூரியின் மாணவர் எண்ணிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாமைக்கு முக்கிய காரணமெனலாம்.

- ♣ மிகப் பெருமளவு பௌதிக வளங்கள்
- ♣ நவீன கற்றல் - கற்பித்தல் சாதனங்கள்
- ♣ நவீன தொடர்பாடற் சாதனங்கள்
- ♣ தரமான வசதி கொண்ட நூலகம்
- ♣ சிறந்த முறையில் புனரமைப்புச் செய்யப்பட்ட ஆய்வு கூடங்கள் இரண்டு
- ♣ புனரமைக்கப்பட்ட, விசாலிக்கப்பட்ட விளையாட்டு மைதானம்
- ♣ பல்வேறு விளையாட்டு உபகரணங்கள்
- ♣ அதிகளவு ஆசிரிய வளம்
- ♣ மதிய உணவு வழங்கல்
- ♣ புலமைப் பரிசிற் திட்டம்
- ♣ விசேட செயற்திட்டங்கள்

போன்ற அனைத்து வளமிக்க எமது கல்லூரியில் கற்க மாணவர்கள் விடுவிக்கப்படவில்லையாயின் இந்த நிறைந்த வளங்களால் எமது மண்ணுக்கு எந்தப் பயனும் எற்படப் போவதில்லை என்பதை அனைவரும் மனங்கொள்ள வேண்டும்.

மிகவும் கஷ்ட நிலையில் வாழும் ஏழை மாணவர்கள் இத்தகைய வளங்களைப் பயன்படுத்தி தமது வாழ்வை வளமாக்கிக் கொள்ள முயற்சித்தல் வேண்டும்.

**கல்லூரி விருத்திக்காக செயற்படுத்தப்பட்ட ஏனைய செயற்றிட்டங்கள்**

**விளையாட்டு**

**1) மைதான விருத்தி**

விளையாட்டு மைதானம் காணி கொள்வனவு- 30 பரப்பு, -23 பரப்பு

**மேற்கு எல்லை**

உதை பந்தாட்டக் களம் அமைத்தல்

"பான்ட்" வாத்தியக் குழு உடை கொள்வனவு

கிரிக்கட் ஆடுகளம் நிர்மாணிப்பு, உபகரணக் கொள்வனவு

**2) கட்டிட அபிவிருத்தி**

- ♠ GTZனால் மலசல கூடத் தொகுதி புதிதாக அமைக்கப்பட்டது (ஆண், பெண்)
- ♠ GTZ அனுசரணையுடன் 100'x20' வகுப்பறைக் கட்டிடத்தொகுதிப் புனரமைப்பு
- ♠ ஒன்று கூடல் மண்டப அபிவிருத்தி
- ♠ சுற்றுமதி அமைப்பு ரூபா 15இலட்ச செலவில்
- ♠ விடுதி மதில் புனரமைப்பு வேலிக்கான முட்கம்பி அடித்தல் வேலை ரூபா 25லட்சம்
- ♠ மேல் மாடி புனரமைப்பு ரூ 17 இலட்சம்
- ♠ விடுதி உள்வீதி திருத்தம்
- ♠ மனையியில் கூடம் அழகியல் பாட அறை திருத்தம் ரூபா 7 இலட்சம்
- ♠ அதிபர் அலுவலகம் நவீன முறையிலான புனரமைப்பு வேலை ரூ 5லட்சம்
- ♠ தகவல் தொழினுட்ப மண்டபம் அமைத்ததும், கணனிகள் கொள்வனவும் 10லட்சம்
- ♠ க.பொ.த. உயர்தர விஞ்ஞான ஆய்வு கூடத் தொகுதி அமைத்தல்
- ♠ நூலகப் புனரமைப்பு
- ♠ பாடசாலை விடுதிப்புனரமைப்பு

♠ ஒன்றுகூடல் மண்டப மேடை, கூரைப் புனரமைப்பு

♠ வகுப்பறைப் பிரிப்பு **120 x 20 - 100 x 20**

**தளபாட அபிவிருத்தி**

♠ நூலகத் தளபாடக் கொள்வனவு

♠ விடுதிக்குரிய தளபாடக் கொள்வனவும், திருத்தமும்

♠ ஒன்றுகூடல் மண்டபக் கதிரை (600)

♠ விஞ்ஞான ஆய்வு கூடத் தளபாடமும், உபகரணங்களும்

♠ அலுவலகத் தளபாடக் கொள்வனவு

**குடிநீர் அபிவிருத்தி**

♠ நீர்தாங்கி அமைத்தல்

♠ பாடசாலை நீர் விநியோகக் குழாய் புனரமைப்பு

♠ விடுதி நீர் விநியோகக் குழாய் புனரமைப்பு

♠ நீர் மோட்டார் கொள்வனவு

**மின்சார அபிவிருத்தி**

♠ மின்இணைப் **ICT Center** (பாடசாலை)

♠ மின் இணைப்பு விடுதி

♠ உள்ளகத் தொடர்புச்சாதன இணைப்பு

♠ ஒன்றுகூடல் மண்டப மின்சார இணைப்பு

♠ மின்பிறப்பாக்கிக் கொள்வனவு

**கற்பித்தல் உபகரண கொள்வனவு**

♠ மேந்தலை எறிகருவி இணைப்பு

♠ பல்லூடகத் தெறி கருவி இணைப்பு

♠ ஒலி ஒளிச் சாதனங்கள்

♠ நிழற் படப் பிரதி இயந்திரம்

♠ வானொலிகள்

♠ தொலைநகல்

♠ தொலை பேசிகள்

♠ தொலைக்காட்சிப் பெட்டிகள்

♠ இறுவட்டுக்கள்

♠ **D VD**

♠ கணனிப் பொறிகள்

♠ மின்பிறப்பாக்கி

♠ நூல்கள் கொள்வனவு

♠ ஒலிபெருக்கி **Box 06**

♠ ஸ்லைட் புறஜெக்டர்

**மேலதிக செயற்பாடுகள்**

விடுதி நிலம் உயர்த்தல்
பாடசாலை நிலம் உயர்த்தல்
முன்பக்க மதில் வெள்ளை பூசுதல்
சிவராத்திரி மகோற்சவம் (03 வருடம்)
புலமைப் பரிசில் வழங்கல்
மதிய உணவு வழங்கல்.
நவோதயாப் பாடசாலை மூலம் 21/2 லட்சம் பெறுமதியான பொருட் கொள்வனவு மாலை நேர வகுப்புக்கள் நடத்தல்

க.பொ.த.(சா/த) பரீட்சை (2006) டிசம்பர் பகுப்பாய்வு

| பாடங்கள் | A | B | C | S | W | தோற்றியோர் மொத்தம் | சித்தி | சித்தி சதவிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| சமயம் | 30 | 12 | 09 | 07 | 01 | 59 | 58 | 98.31% |
| R.C | 00 | 01 | 00 | 00 | 00 | 01 | 01 | 100.00% |
| தமிழ் | 16. | 13 | 17 | 13 | 01 | 60 | 59 | 98.33% |
| ஆங்கிலம் | 00 | 00 | 00 | 10 | 50 | 60 | 10 | 16.67% |
| கணிதம் | 10 | 10 | 20 | 14 | 06 | 60 | 54 | 90.00% |
| விஞ்ஞானம் | 02 | 02 | 10 | 18 | 28 | 60 | 32 | 53.33% |
| சமூகக்கல்வி | 10 | 14 | 20 | 12 | 04 | 60 | 56 | 93.33% |
| சங்கீதம் | 22 | 05 | 07 | 03 | 01 | 38 | 37 | 97.37% |
| நடனம் | 02 | 01 | 02 | 01 | 00 | 06 | 06 | 100.00% |
| சித்திரம் | 00 | 00 | 01 | 11 | 04 | 16 | 12 | 75.00% |
| வர்த்தகம் | 01 | 00 | 01 | 01 | 01 | 04 | 03 | 75.00% |
| மனையியல் | 00 | 01 | 06 | 09 | 02 | 18 | 16 | 88.89% |
| [illegible] | 07 | 11 | 05 | 00 | 01 | 24 | 23 | 95.83% |
| விவசாயம் | 03 | 04 | 04 | 02 | 01 | 14 | 13 | 92.86% |
| புவியியல் | 00 | 01 | 17 | 28 | 14 | 60 | 46 | 76.67% |
| அபிவிருத்திக்கல்வி | 01 | 08 | 29 | 17 | 05 | 60 | 55 | 91.67% |

**A/L தகுதி பெற்றோர் விபரம் = 46/60 சித்தி வீதம் = 76.66**
**க.பொ.த (உ/த) வகுப்புக்கு தகுதிபெற்றோர் வீதம் =76.66**

## யா/ வேலணை மத்திய கல்லூரி

J/VELANAI CENTRAL COLLEGE

G.C.E (A/L) Result Analysis – 2006

Summary

Islands Zone, Velanai

| S/ No | Type of Streem | No .of. Sat | No. of.3 Subj -ect Pass | No. of.2 Subj -ect Pass | No. of.1 Subj -ect Pass | No. of 3A pass | No.of. All Subj -ect Fail | Percen -tage of Pass | Percen -tage of Fail | No.of Eligible for University Admision | Percen -tage of Eligible for Univer sity Admision |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Maths | 03 | -- | -- | 01 | -- | 02 | -- | 100% | -- | -- |
| 2 | Comme rce | 06 | 04 | 01 | -- | -- | 01 | 66.7% | 33.3% | 04 | 66.7% |
| 3 | Arts | 26 | 23 | 03 | -- | 01 | -- | 88.5% | 11.5% | 22 | 84.6% |
| | Total | | | | | | | | | | |

## தற்போது பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டிருப்போர்

1. செல்வி க. சரஸ்வதி
2. செல்வி சி. நிசாந்தனி
3. செல்வி சுவர்ணமுகி
4. செல்வி க. காயத்திரி
5. செல்வி சி. ஜெயந்திமாலா
6. செல்வி க. பிரியா
7. செல்வன் அ. மதீசன்
8. செல்வன் கி. சுகந்தராஜ்
9. செல்வி க. டர்சினி
10. செல்வி. இ. தர்சினி
11. செல்வி. V துஷாயினி
12. செல்வன் K. தேவபாலன்
13. செல்வன் இ. ஜெயராஜ்
14. செல்வன் கு. கோபிநாத்
15. செல்வன் அ. லிங்கேசன்
16. செல்வன் க. சுகுமார்
17. செல்வன் சி. ரவின்சன்
18. செல்வன் சி. அசோக்குமார்
19. செல்வி சு. அருட்செல்வி
20. செல்வன் பா. விஜயதர்சன்
21. செல்வி தே. நிறஞ்சனி

விருத்தியையும், வளர்ச்சியையும் எதிர்நோக்கி உள்ள பின்தங்கிய ஒரு பிரதேசத்தில் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு கல்வி நிறுவனத்தில் மாணவர்கள் கல்வி கற்பதில் உள்ள நியாயத் தன்மையை மனிதாபிமானம் மிக்கவர்கள், மனச் சாட்சியுள்ளோர் உணர்ந்து கொண்டு செயலாற்ற வேண்டும். கல்வி கற்கும் உரிமையை யாரும் மறுக்கவோ, தடுக்கவோ முடியாது. அந்த உரிமை யாருக்கும் இல்லை. கல்வியியலாளர், கல்வி அதிகாரிகள், சமூகப் பெரியோர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் இது சமர்ப்பணம்.

## கல்விசார் / சாரா ஆளணியினர்

எமது கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரிய ஆளணி 29ஆகும். தற்போது 43 ஆசிரியர்கள் உள்ளனர் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்களுள் செல்வி P.விஜயலெட்சுமி, திருமதி S.வரதராஜா, திருமதி ஜெயலெட்சுமி ஆகியோர் தற்காலிக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். சங்கீத ஆசிரியை நீண்ட நாள் லீவில் நிற்கின்றார்.

புவியியல் ஆசிரியர் திரு. பா. லோகேஸ்வரன் பதவி உயர்வு பெற்று வடக்கு மாகாண சபைக்கும், தமிழ் பாட ஆசிரியை திருமதி S. சுரேந்திரன் யாழ் வலயத்திற்கும் இட மாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

சித்திரபாட ஆசிரியை வார நாட்களில் இரண்டு நாட்கள் யா/ வேலணை மேற்கு நடராஜா வித்தியால யத்தில் கடமையாற்றுவதால் அதனை நிவர்த்தி செய்வதற்காக எமது பழைய மாணவன் ஜெயராஜ் சித்திர பாடத்தைக் கற்பிப்பதற்கு எம்மால் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளார். இதனைவிட முகாமைத் துவ உதவியாளர், அலுவலக எழுது வினைஞர், காவலாளிகள், ஆகிய ஆளணி யினர் பதவி இன்னமும் வெற்றிடமாகவே உள்ளது. அலுவலக வேலைகளை இலகுவாக்க ஆசிரியர்கள் பயன் படுத்தப்படுவதால் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை வினைதிறன் ஆற்ற முடியாதுள்ளது. இது ஆசிரியர்களின் வேலைச் சுமையை இன்னும் அதிக மாக்குகின்றது. உரியவர்கள் இதில் அக்கறை கொண்டு எமது கல்லூரிக்கு உதவ வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

எமது கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி. ஆ. குமாரசாதன் அவர்கள் கலாசார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டியில் பாடலாக்கத்திற்காக (கெட்ட போரினை விரட்டுவோம்) அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம் பெற்றமையும் எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளது.

## பௌதிகவளம்

எமது கல்லூரியின் பௌதிக வள மான கட்டிடம் தொடர்பாக அவை எமது தேவைக்குப் போதுமானதாக உள்ளன. இவை பல ரூபாய் செலவில் புனரமைக்கப் பட்டு இன்று பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

இதனால் மாணவர் புலக்காட்சி மூலமும், ஒலி மூலமான கேட்டல் மூலமும் கற்றலில் ஈடுபட வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பயனுள்ள வகையில் இந்த அலகில் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றது.

## பாடசாலைச் சுற்றுமதில்

பாடசாலைச் சுற்றுமதில் புன ரமைப்பு சுமார் 15லட்ச ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் மாணவர் விடுதி மதில் புனரமைப்பும், முட்கம்பி வேலி போடும் செயற் பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு பாதுகாக்கப் பட்டுள்ளது.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

பாடசாலைச் செயற்பாடுகளில் எமது கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தினர் பெரும் பங்காற்றி வருகின்றது. கல்லூரியின் அபிவிருத்திச் செயற் றிட்டங்கள், கல்லூரிச் சிரமதான நிகழ்வுகள், ஆசிரிய தின விழா, மதிய போசன வழங்கல் செயற்றிட்டம், கல்லூரி விளையாட்டு மைதானப் புனரமைப்பு, கல்லூரி மேற்கு எல்லை வீதிப் புனரமைப்பு என்பவற்றில் தனது காத்திரமான பங்களிப்பையாற்றி யுள்ளமை இங்கு குறிப் பிடத்தக்கது. இச் சங்கத்தின் தலைவராக அதிபர் அவர் களும், செயலாளராக திரு. பா. தவபாலன் அவர்களும், பொருளா ளராக ஆசிரியர் திரு. இ. யோகேஸ்வரன் அவர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

## பழைய மாணவர் சங்கம்

எமது கல்லூரியின் சகல வளர்ச்சியிலும் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்பு மிகக் காத்திரமானதென்றே குறிப் பிடலாம். எமது கல்லூரியினது அனைத்துச் செயற்பாடுகளிலும் பல ஆக்க பூர்வமான முயற்சிகளை முன்னெடுத்து வந்துள்ளது. வருகின்றது.

## ஆசிரியர் கழகம்

எமது கல்லூரி ஆசிரியர் கழகம் ஆசிரியர் நலன் கருதி பல சிறந்த செயற்பாடுகளை ஆற்றி வருகின்றது ஆசிரியரது நலன்களைப் பேணுவதிலும், ஆசிரியர்களிடையே நல்லுறவைப் பேணுவதிலும் அக்கறை செலுத்தி வருகின்றது. இவ்வாண்டு ஆசிரியர் கழகத்தின் தலைவராக திரு. சு. சிவானந்தன் அவர்களும், செயலாளராக திருமதி. ஆ. குமாரதாசன் அவர்களும், பொருளாளராக செல்வி க. கலாஞானசுந்தரி அவர்களும் செயற்பட்டு வருகின்றனர். ஆசிரியர் கழகமானது ஆசிரியர்களுக்கு பயனுள்ள வகையில் செயற்பட வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

## மன்றங்கள்

மாணவர்களது கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை, மேம்படுத்தல் தொடர்பாக பல்வேறு மன்றங்கள் இயங்கி வருகின்றது. பாடரீதியான மன்றம், இந்துமாமன்றம் கனிஷ்ட, இடைநிலை, சிரேஷ்ட மாணவ மன்றங்களும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. எமது உயர்தர மாணவர் மன்றம் இவ்வருட ஆசிரியர் தின விழாவை மிகச் சிறப்பாகச் செய்து முடித்துள்ளது. இந்து மாமன்றம் சமய, பண்பாட்டு நிகழ்ச்சிகளில் தனதுபங்களிப்பைத் திருப்தி கரமாகச் செய்து வருகின்றது. வெள்ளிக் கிழமை ஒன்றுகூடல் திருக்கேதீச்சர மகோற்சவத்தின் கல்லூரித் திருவிழாச் செயற்பாடுகளில் காத்திரமான பங்களிப்பை ஆற்றி வருகின்றது.

## தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப நிலையம்

எமது கல்லூரியில் கணனிக் கற்றலுடன் தகவல் தொழிநுட்பக் கல்வியையும் மேம்படுத்தும் நோக்கோடு ICT Center ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஏறத்தாள 20 கணனிகளைக் கொண்டதாக இணையத் தள வசதிகளையும் பெறக்கூடிய வகையில் இந்த நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. தினந்தோறும் சுமார் 200 மாணவர்கள் இக்கணனி நிலையத்தைப் பயன்படுத்திப் பயன்பெற்று வருகின்றனர். எமது கல்லூரி ஆசிரியர்களில் 20பேர் கணனி தொடர்பான பயிற்சியைப் பெற்றுள்ளனர். இந்நிலையம் இங்கு செயற்பட்டு வருவதால் எமது மாணவர்கள் கணனி அறிவைப் பெறுவதற்காக யாழ்நகர் செல்ல வேண்டிய தேவை இல்லை.

## ஒலி, ஒளி அலகு

கற்றல் கற்பித்தலில் இன்று மின்னூடக சாதனங்கள் தமது பெரும் பங்களிப்பை ஆற்றி வருகின்றன. ஒடியோ வீடியோ அலகில் தொலைக் காட்சி, வானொலி (Overhead Projector) மேந்தலை எறிகருவி, வழுக்கிஎறி கருவி

(Slide Projector) CD பயன்பாட்டுக்குரிய கருவிகள், பல் ஊடாக சாதனம் போன்றன உள்ளடங்கியுள்ளன. இதில் பாட ரீதியான வீடியோ இறு வெட்டுக்ள் (CD) பயன்படுத்தப் பட்டு வருகின்றது.

## மாணவர் விடுதிகள்

இலவசக் கல்வியின் தந்தை C.W.W. கன்னங்கரா அவர்களின் சிந்தனையில் உதித்த மத்திய கல்லூரிகள் புனரமைப்புப் பணிகளில் எமது கல்லூரி மாணவர் விடுதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. இதைவிட குடிநீர் வசதி, மின் இணைப்பு வேலைகளும் இடம்பெற்றுள்ளது. எமது பழைய மாணவர் சங்கங்களின் உதவியுடன் மாணவர்களுக்கான மதியபோசனத் தயாரிப்பும், வழங்கலும் இங்கே இடம் பெறுகின்றது.

## விளையாட்டு மைதானம்

விளையாட்டு மைதானத்துக்கான காணிகள் கொள்வனவு செய்யப்பட்டு விரிவாக்கப்பட்டதுடன், உதைபந்தாட்டத்துக்கான களமும் அமைக்கப் பட்டுள்ளது. இதனைவிடக் கிரிக்கெட் ஆடுகளம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், பல நவீன விளையாட்டு உபகரணங்களும் கொள்வனவு செய்யப் பட்டும் உள்ளது.

வேலணை மத்திய கல்லூரியின் கொழும்பு
பழைய மாணவர் சங்கத்தின்

## வாழ்த்துச் செய்தி

இருட்டைச் சபிப்பதை விடுத்து ஒரு சிறு மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்பது நல்லது. இன்றைய இருண்டகால கட்டத்திலும் எமது மாணவர்களின் கற்றலை ஊக்குவிக்கும் வகையிலும் கல்லூரி விழுமியங்களைப் பேணிப்பாதுகாத்து வளர்க்கும் வகையிலும் பரிசளிப்பு விழாவை இக் கல்லூரியின் கல்விச் சமூகம் கொண்டாடுவது என்பது ஒர் வியக்கத்தக்க விடயமாகும். உண்மையில் அது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

எமது கல்லூரியின் பாடச் செயற்பாடுகள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் ஆகியவற்றில் பல வெற்றிகளைப் பெற்று மாணவர்கள் பலவித தேர்ச்சிகளை நிறைவு செய்து உயர்ச்சியடைவதையிட்டு எமது சங்கம் புளகாங்கிதமடைகிறது. இந்த வளர்ச்சிக்கு காரணமாக அயராது அர்ப்பணிப்புடன் உழைக்கும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் மற்றும் சர்வதேச ரீதியாக இயங்கும் எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்கள் ஆகியோரைக் கொண்ட கல்விச் சமூகத்திற்கு எமது பாராட்டுக்களும் உரித்தாகுக.

பரிசளிப்பு விழா சிறப்புற அமைய வேண்டுமென எமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் மனதாரப் பிரார்த்தித்து மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறார்கள்.

திரு. R. சுந்தரமூர்த்தி
தலைவர்

திரு. க.ஸ்ரீரங்கநாதன்
பதில் தலைவர்

திரு. பொன். ஈசன்
செயலாளர்

## பழைய மாணவர் சங்கம் – பிரான்ஸ்

# வாழ்த்துச் செய்தி

தீவகத்தின் சிறப்புமிக்க எம் கல்லூரியான வேலணை மத்திய மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் வாழ்த்துச் செய்தியின் மூலம் பங்கு கொள்வதில் பெருமகிழ்வடைகின்றோம். இப்பரிசளிப்பு விழாவில் பங்குகொண்டு சிறப்புறும் மாணவமணிகள், ஆசிரியப் பெருந்தகைகள், நிர்வாகத்தினர் ஆகியோருக்கு எம் சிறப்பான வாழ்த்துக்களைக் தெரிவித்துக் கொள்கிறோம்.

வேலணை மத்திய கல்லூரி தீவகத்தின் தனிப்பெரும் சொத்து. இக் கல்லூரி உருவாக்கிய பல உயர் தொழில் வல்லுனர்கள் இன்று பல உலக நாடுகளில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எம் அனைவரையும் பெருமை பேச வைக்கிறது.

ஆனால் யுத்தத்தின் கொடுமைகளும் அதன் காரணமான மக்களின் பாரிய அளவிலான இடப்பெயர்வும் எமது பெருமைமிக்க கல்லூரியின் முன்னோக்கிய பாய்ச்சலில் மிகப்பெரும் பின்னடைவை ஏற்படுத்தி விட்டது. இந்த பின்னடைவு உடனடியாக நிவர்த்திக்க முடியாத ஒன்றாக எம்முன் விஸ்வரூபம் எடுத்து எம்மை பயமுறுத்துகின்றது. பல்லாயிரக்கணக்கான தீவக மாணவர்களின் வாழ்விற்கு வித்தூன்றிய பெருமைமிக்க எமது கல்லூரியின் இன்றைய நிலை, கல்லூரியை மனதார நேசிக்கும் அனைத்து உள்ளங்களிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும் இத்தகைய மோசமான பின்புலத்தின் மத்தியிலும், பாடசாலை அதிபரினதும் நிர்வாகத்தினரதும் அர்ப்பணிப்பும், அதன் பயனான பெறு பேறுகளும் எம்மை ஓரளவுக்கேனும் ஆறுதல்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றன.

எமது கல்லூரியின் உயிர்ப்பு என்பது யுத்தக் காரணிகளால் ஏதிலிகளாக்கப்பட்ட எம் தீவக மக்களால் தனித்து நின்று செயற்படுத்திட முடியாதது என்பதை, உலகெங்கும் பரந்து வாழும் இக் கல்லூரியின் பழைய மாணவர்களாகிய நாம் நன்கு உணர்ந்துள்ளோம்.

இன்றைய மோசமான போக்கினைத் தடுத்து நிறுத்த ஆவன செய்யாவிடின் எம் கல்லூரி மேலும் சிதைவடைந்து, மீளமைக்கமுடியாத நிலைக்கு சென்று விடக் கூடிய அபாய நிலமையை எம் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களும் தீவக மக்களும் கருத்தில் எடுக்க வேண்டிய காலம் இதுவெனக் கருதுகின்றோம். தீவகத்தின் அடுத்துவரும் சந்ததியினருக்காக இக்கல்லூரியைப் பேணிப்பாதுகாக்க வேண்டியது இவர்களின் கடப்பாடாகின்றது.

காலத்தால் புறந்தள்ளப்பட்டுள்ள எம் கல்லூரியின் இன்றைய அத்தியாவசிய தேவைப்பாடுகளை வகைப்படுத்தி அவற்றினை நிறைவேற்றி வைக்கும் பாரிய பொறுப்பு புலம்பெயர்ந்த தேசத்து எம் கல்லூரி பழைய மாணவர்களின் கரங்களில் தான் தங்கியுள்ளது. புலம்பெயர் தேசத்து எம் கல்லூரி உறவுகள், எம் கல்லூரியை பேணும் வகையில் பொறுப்புடன் செயலாற்ற ஒன்றிணைவார்கள் என்று நம்புகின்றோம்.

எம் கல்லூரியின் இப்பெருவிழா சிறப்புற நாம் வாழ்த்துவதோடு, இன்னும் பல்லாயிரமாண்டு காலம் எம்கல்லூரி நிலைபெற்றிட
வேண்டும் என்பதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுகின்றோம்.

நன்றி

தலைவர்

செயலாளர்

## யா/ வேலணை மத்திய கல்லூரி

## ஆளணி விபரம் – 2007

01. திரு. பொ. அருணகிரிநாதன் அதிபர், B.A(Hons)PG.Dip.IN.Edu.M.Ed. SLPS-I, J.P
02. திருமதி ஆ. குமாரதாசன் பிரதி அதிபர், B.A. Dip. IN Ed, M.Ed .SLTS. 2.I
03. திரு. சு. சிவானந்தன் பிரதி அதிபர் B.B.A Dip. IN Ed, .SLTS - 2. II
04. திரு. இ. யோகேஸ்வரன் பகுதித்தலைவர் B.com. Dip. IN Ed, .SLTS - 2. II
05. திரு. த. கபிலநாதன் பகுதித்தலைவர் SP.Trd.in.Eng SLTS - 2. II
06. செல்வி க. கலாஞானசுந்தரி பகுதித்தலைவர் B.com. Dip. IN Ed, .SLTS - 2. II
07. திருமதி வாசுகி கபிலநாதன் ஆசிரியர் B.A(Hons) Dip. IN Ed, .SLTS - 2. II
08. திரு. பொ. செல்வகுமார் ஆசிரியர் B.Sc. Dip. IN Ed, SLTS - 2. II
09. திருமதி யோ. வரைமகள் ஆசிரியர் B.Sc.Dip. IN Ed, SLTS - 2. II
10. திருமதி க. எழிலரசன் ஆசிரியர் B.A SLTS - 3. I
11. திரு. த. ஜெயபாபு ஆசிரியர் B.com. (Hons) Dip. IN Ed, .SLTS - 2. II
12. திரு. பா. குணாகரன் ஆசிரியர் Na. Dip. IN Tea (Maths), .SLTS - 3. II
13. திருமதி வி. இராஜமுகுந்தன், ஆசிரியர் Na. Dip. IN Tea (Science), .SLTS - 3. II
14. திரு.இ.சிவசேகரன் ஆசிரியர் Na. Dip. IN Tea (P.T), .SLTS - 3. II
15. செல்வி பொ. விஜயலெட்சுமி ஆசிரியர் Na. Dip. IN Tea (Teac), .SLTS - 3. II
16. திருமதி வி.சிவலோகநாதன், ஆசிரியர். Dip. IN Dance .SLTS - 2. II
17. திருமதி ஜெ. ஸ்ரீஸ்கந்தராஜா சிரேஷ்ட ஆசிரியர் B.A Dip. Ed SLTS - 2. I
18. திருமதி சாந்தினிதேவி ஜெராட் ஆசிரியர். B.B.A Dip. IN Ed, .SLTS - 3. II
19. திரு. சி. சிவலோகநாதன் ஆசிரியர் B.Sc Dip. IN Ed, .SLTS - 2. II
20. திரு. தி. சூரியகாந்தன் ஆசிரியர் .(Trd.Com)
21. செல்வி ம. மயில்வாகனம் ஆசிரியர் (B.F.A) SLTS - 3-I
22. செல்வி சி. சிவபாதசுந்தரம் B.A (Hons) .SLTS - 3. I
23. செல்வி கோ. நடராஜா B.Sc. .SLTS - 3. I
24. செல்வி லா. யோகராஜா ஆசிரியர் B.Sc SLTS - 3. I
25. திரு. த. ஸ்ரீசெல்வம் B.A Dip. In.Ed..SLTS - 2. II
26. திருமதி சு. வரதராசா B.A .SLTS - 3. I
27. திருமதி ச. டென்கொன்ஸ்ரைன் B.com. .SLTS - 3. I
28. திரு. இ. விஜயதீபன் B.Sc .SLTS - 3. I
29. திருமதி இ. தயாபரன் .Mu. IN. Dip..SLTS - 3. I
30. திருமதி சோ. குலத்துங்கன் B.A (Hons) .SLTS - 3. I
31. செல்வி. அனிஸ்ரா ஜெயகுமாரி ஆசிரியர் B.com .SLTS - 3. I
32. திரு.ச. சந்திரசேகர் B.A. (Hons) .SLTS - 3. I
33. திருமதி .M. கிருஷ்ணவேணி Ho.Sc.Trd .SLTS - 3. I
34. செல்வி. க. அகிலா Na. Dip. IN Tea (Music), .SLTS - 3. I

35. திரு. தி. செல்வமனோகரன் B.A. (Hons) .SLTS. 3. I
36. செல்வி ப. அஜந்தினி Na. Dip. Tea (English), . - 3. I
37. செல்வி த. தனுஜா Na. Dip. IN Tea (Social), .SLTS - 3. II
38. செல்வி ச. சிவதர்ஷினி Na. Dip. IN Tea (Social), .SLTS - 3. II
39. செல்வி ம. பகீரதி Na. Dip. IN Tea (Social), .SLTS - 3. II
40. செல்வி சி. றமேலா ஆசிரியர் Na. Dip. IN Tea (Hin), .SLTS - 3. II
41. செல்வி. இ. ஜெயலெட்சுமி Na. Dip. IN Tea (Social), .SLTS - 3. II
42. திருமதி கு. குமணன் B.A. Eco (Hons) .SLTS. 3. I
43. செல்வி ச. றஜனி Na. Dip. IN Tea (Social), .SLTS - 3. II
44. திரு. சிவசங்கர் ஆசிரியர் B.A. Geo .SLTS. 3. I
45. திருமதி கிருஷ்ணவேணி ஆசிரியர் . Primary SLTS 3.II
46. திருமதி வ. நந்தினி ஆசிரியர் . Trd. Teacher 3 III

## உதவி ஆளணியினர்

47. திரு. S. சண்முகலிங்கம் (ஆங்கிலம்)
48. திரு. இ. ஜெயராஜ் (சித்திரம்)

## கல்விசாரா உத்தியோகத்தர்

01. திரு. தி. கிருஷ்ணராஜா - விடுதி மேற்பார்வையாளர்
02. திரு. கா. கிருஷ்ணகுமார் - பாடசாலைத் தொழிலாளி
03. திரு. ச. அருட்செல்வன் - ஆய்வுகூட உதவியாளர்
04. திரு. பா. இரவீந்திரன் - பாடசாலைத் தொழிலாளி
05. திரு. இ. தோ. அமலதாஸ் - நூலக உதவியாளர்
06. திரு. பா. இராமேஸ்வரன் - பாடசாலைத் தொழிலாளி
07. திரு. இ. பாலச்சந்திரன் - சமையற்காரர்

## பாடரீதியாக பரிசு பெறுவோர் விபரம் — 2005

### தரம் — 06

1. வேணுஜா சோமசுந்தரம் → தமிழ், சமயம், ஆங்கிலம், கணிதம், சுற்றாடல்
2. பிரியங்கா வடிவேல் → அழகியல்
3. விவேகானந்தன் யதுர்ஷனன் → சுகாதாரம்

### தரம் — 7

4. கஸ்தூரி சத்தியலிங்கம் → தமிழ், சமயம், சமூகக்கல்வி. சங்கீதம்
5. ஜெயக்குமார் ஜெசிந் → ஆங்கிலம்
6. துரைசிங்கம் தனுசன் → கணிதம், விஞ்ஞானம், நடனம்
7. நடேசமூர்த்தி கவிதரன் → சித்திரம்
8. சரண்யா யோகநாதன் → சுகாதாரம்

### தரம் — 8

9. கனகரட்ணம் முகுந்தகுமார் → தமிழ், கணிதம், சமூகக்கல்வி
10. வஜீரா ஆனந்தரூபன் → சமயம், சங்கீதம்
11. தீபிகா சுப்பிரமணியம் → ஆங்கிலம்
12. ஞானசேகரம் கபூரன் → விஞ்ஞானம், சுகாதாரம்
13. கணேசமூர்த்தி தர்சிகன் → சித்திரம்
14. நிரஞ்சனி சோதிலிங்கம் → நடனம்

### தரம் — 9

15. அருட்பிரகாசம் நிறோசன் → சமயம், ஆங்கிலம், சங்கீதம், சுகாதாரம்
16. பரஞ்சோதி விஸ்ணுகாந் → கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, சித்திரம்
17. சண்ஜா சோமசுந்தரம் → தமிழ்
18. அபிரா நாகரட்ணம் → நடனம்

### தரம் 10

19. தனுசா தனபாலசிங்கம் → சமயம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், வர்த்தகம்
20. தணிகாசலம் குகதாஸ் → கணிதம், சமூகக்கல்வி, கடல் வளத்தொழினுட்பம்
21. யமுனா கந்தசாமி → நடனம், விவசாயம்
22. கம்சா சிவராசா → சங்கீதம்
23. யாழினி கிருஸ்ணகுமார் → சித்திரம்
24. மயூரி செல்வராசா → மனைப்பொருளியல்

### தரம் – 11

25. யசிந்தா தர்மலிங்கம் → சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, சித்திரம், வர்த்தகம்
26. ராதிகா பரஞ்சோதி → கணிதம், விவசாயம்
27. தியாகராஜா விஜிகரன் → சித்திரம், கடல்வளத் தொழினுட்பம்
28. கிருஸ்ணராசா உதயராஜ் → சங்கீதம்
29. பிரியா கந்தசாமி → நடனம்
30. நிகர்சனா தனபாலசிங்கம் → மனைப்பொருளியல்

## பாடரீதியாக பரிசுபெறுவோர் விபரம் – 2006

### தரம் – 6

1. பஞ்சலிங்கம் மதீஸ்சன் → சமயம், கணிதம்
2. கஜந்தினி சிவராசா → தமிழ், ஆங்கிலம், சுற்றாடல், அழகியல், சுகாதாரம்

### தரம் – 7

3. வேணுஜா சோமசுந்தரம் → சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சங்கீதம்
4. விவேகானந்தன் யதுர்ஷன் → சமயம், சித்திரம், சுகாதாரம், சமூகக்கல்வி
5. கந்தவனம் கீர்த்தனன் → சங்கீதம்
6. விதுசா தனபாலசிங்கம் → நடனம்

### தரம் – 8

7. கஸ்தூரி சத்தியலிங்கம் → சமயம், சங்கீதம், சுகாதாரம்
8. ஜெயகுமார் ஜெசிந் → தமிழ், ஆங்கிலம்
9. துரைசிங்கம் தனுசன் → கணிதம், விஞ்ஞானம், நடனம்

10. சாரங்கா ஸ்ரீகுமரன் → சமூகக்கல்வி

11. நடேசமூர்த்தி கவிதரன் → சித்திரம்

**தரம் — 9**

12. கனகரட்ணம் முகுந்தகுமார் → தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக்கல்வி

13. ஞானசேகரம் கபூரன் → கணிதம்

14. வஜீரா ஆனந்தரூபன் → சங்கீதம்

15. சிந்துஜா அருட்பிரகாசம் → சங்கீதம்

16. நிரஞ்சினி சோதிலிங்கம் → நடனம்

17. கணேசமூர்த்தி தர்ஷிகன் → சித்திரம்

18. ஜிகிதா இரத்தினம் → சுகாதாரம்

சிந்துகா இராசேந்திரம் → சமயம்

**தரம் — 10**

19. பரஞ்சோதி விஸ்ணுகாந் → தமிழ், கணிதம், விஞ்ஞானம், சித்திரம், விவசாயம்

20. அருட்பிரகாசம் நிறோசன் → சமயம், தமிழ், சமூகக்கல்வி, சங்கீதம், வர்த்தகம்

21. சண்யா சோமசுந்தரம் → ஆங்கிலம்

22. அபிரா நாகரட்ணம் → நடனம்

**தரம் — 11**

23. தனுசா தனபாலசிங்கம் → சமயம், ஆங்கிலம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, வர்த்தகம்

24. யமுனா கந்தசாமி → தமிழ், நடனம், விவசாயம்

25. தணிகாசலம் குகதாஸ் → கணிதம்

26. நீக்கிலாஸ் நந்தகுமார் → சித்திரம்

27. கம்சா சிவராசா → சங்கீதம், மனைப்பொருளியல்

28. லோகேந்திரன் இதயதீபன் → கடல்வளத் தொழினுட்பம்

## பாடரீதியாக பரிசு பெறுவோர் விபரம் — 2007

**தரம் — 6**

1. மயூரி அரியபுத்திரன் → சமயம், ஆங்கிலம், சமூகவிஞ்ஞானம், வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும்

2. மேரிதுளசிகா செல்வானந்தம் → தமிழ், சமயம்

3. நவக்குமார் பிரசாந் → கணிதம்

4. கீர்த்திகா தியாகராசா → விஞ்ஞானம்

5. சுப்பிரமணியம் பிரணவன் → விஞ்ஞானம்

6. முத்துலிங்கம் யசிந்தன் → செயன்முறைத் தொழினுட்பம், சுகாதாரம்

7. சிவதர்சினி சிவராசா → சங்கீதம்

8. பானுஜா பஞ்சலிங்கம் → நடனம்

9. தாட்சாயினி தருமு → சித்திரம்

**தரம் — 7**

10. கயந்தினி சிவராசா → சமயம், ஆங்கிலம், விஞ்ஞானம், நடனம், சுகாதாரம்

11. பஞ்சலிங்கம் மதிஸ்சன் → தமிழ், கணிதம், சமூகக்கல்வி, சித்திரம்

12. வேணுப்பிரியா மதியழகன் → சங்கீதம்

**தரம் — 8**

13. வேணுயா சோமசுந்தரம் → சமயம், தமிழ், ஆங்கிலம், சங்கீதம்

14. விவேகானந்தன் யதுர்சனன் → கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, சித்திரம், சுகாதாரம்

15. கஜனி விஜயேந்திரன் → நடனம்

**தரம் — 9**

16. கஸ்தூரி சத்தியலிங்கம் → சமயம்

17. துரைசிங்கம் தனுசன் → தமிழ், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, சுகாதாரம்

18. ஜெயக்குமார் ஜெசிந் → ஆங்கிலம்

19. முத்தமிழ்ச்செல்வி பேரின்பநாயகம் → சங்கீதம்

20. சிந்துஜா கிருஸ்ணகுமார் → நடனம்

21. நடேசமூர்த்தி கவிதரன் → சித்திரம்

**தரம் — 10**

22. கனகரட்ணம் முகுந்தகுமார் → சமயம், ஆங்கிலம், கணிதம், வரலாறு, நாடகமும் அரங்கியலும், தகவல் தொழிநுட்பம்

23. ஞானசேகரன் கபூரன் → விஞ்ஞானம், முயற்சியாண்மை

24. பவதாரணி தவபாலன் → தமிழ்

25. சிந்துயா அருட்பிரகாசம் → சங்கீதம்

26. நிரஞ்சினி சோதிலிங்கம் → நடனம், மனைப்பொருளியல்

27. கணேசலிங்கம் தர்சிகன் → சித்திரம்

28. அசோதியா செல்வராசா → சுகாதாரம்

29. தனபாலசிங்கம் யனோச் → விவசாயம்

30. வர்ணகுலசிங்கம் சண்முகரட்ணம் → புவியியில்

31. குருபாலன் மகிந்தன் → புவியியல்

தரம் – 11

32. பரஞ்சோதி விஸ்ணுகாந் → கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, விவசாயம், சித்திரம்

33. துளசிகா மகாலிங்கம் → சமயம், சமூகக்கல்வி

34. அருட்பிரகாசம் நிறோஷன் → தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி, சங்கீதம், வர்த்தகம்

35. அபிரா நாகரட்ணம் → நடனம்

36. தர்மிகா கோபாலசிங்கம் → மனைப்பொருளியல்

## க.பொ.த.(உயர்தரம்)

**தரம் 12**

**கலைப்பிரிவு**

37. யசிந்தா தர்மலிங்கம்

**தரம் 13**

**கலைப்பிரிவு**

38. விஜிதா குலேந்திரன்

**வர்த்தகப் பிரிவு**

39. ஜனனி சிவராசா

## வரவொழுங்கு, ஒழுக்கம், புறவேலை ஈடுபாடு – 2007

40. தரம் 6A – முத்துலிங்கம் யசிந்தன்

41. தரம் 6B – டேனுஷா விஜயேந்திரன்

42. தரம் 7A → பிரணவி சுப்பிரமணியம்

43. தரம் 7B → கீர்த்தனா தபேந்திரன்

44. தரம் 8A → விவேகானந்தன் யதுர்ஷனன்

45. தரம் 8B → - செந்தூரி கந்தசாமி

46. தரம் 9A - → துரைசிங்கம் தனுசன்

47. தரம் 9B → சரண்யா யோகநாதன்

48. தரம் 10A → உஷாந்தினி தியாகராசா

49. தரம் 10B → கஜாயனி சுவாமிநாதன்

50. தரம் 11A → இரட்சநாதன் அருள்ராஜ்

51. தரம் 11B → குமாரசாமி வாகீசன்

52. தரம் 12A → அனுசியா பாலசுப்பிரமணியம்

53. தரம் 12B → குஜேந்தி குகதாசன்

54. தரம் 12C → தனுஷா தனபாலசிங்கம்

55. தரம் 13 → சிவபாதம் தயாளன்

## சிறந்த பெறுபேறுகள்

**க.பொ.த. (சாதாரணம்) 2004**
விஜிதா குலேந்திரன்

**க.பொ.த. (சாதாரணம்) 2005**
குமரேஸ்வரன் சுபாஸ்கர்

**க.பொ.த. (சாதாரணம்) 2006**
தர்மராஜேந்திரன் சிந்துஜன்

**க.பொ.த. (உயர்தரம்) 2005**
சிவலிங்கம் அசோக்குமார்

**க.பொ.த. (உயர்தரம்) 2006**
டர்சினி கந்தசாமி

## இணைப்பாட விதான செயற்பாடுகள்

1. விளையாட்டுத்துறை:—

*சகல துறை விளையாட்டு வீரர்கள்
செல்வநாயகம் அகீபன்,
வடிவேல் கோகுலதாஸ்

*சகல துறை விளையாட்டு வீராங்கனை
ரேகா ரவீந்திரன்

*சிறந்த மெய்வல்லுநர் விளையாட்டு வீரன்
தவச்செல்வம் விஜயகாந்

*சிறந்த மெய்வல்லுநர் விளையாட்டு வீராங்கனை
திருநாவுக்கரசு சுமாலினி

*உதைப்பந்தாட்ட அணியின் சிறந்த வீரர்கள்
14வயதுப்பிரிவு - சிவநேசன் அசோக்

16வயதுப்பிரிவு - உதயகுமார் குருநாத்
செல்வநாயகம் லக்ஸ்மன்

18வயதுப்பிரிவு - கிருஸ்ணராஜா உதயராஜ்
லோகேந்திரன் இதயதீபன்
பாலச்சந்திரன் ஜனார்த்தனன்

* துடுப்பாட்ட அணியின் சிறந்த வீரர்கள்
19வயதுப்பிரிவு - செல்வநாயகம் அகீபன்
வடிவேல் நிறோயன்

*வலைப்பந்தாட்ட அணியின் சிறந்த வீராங்கனைகள்
15வயதுப்பிரிவு - துஷாரா பாலசிறிதரன்
17வயதுப்பிரிவு - புஸ்பமாலினி பொன்னம்பலம்
19வயதுப்பிரிவு - கஜலக்சி இராசரெத்தினம்

*கரப்பந்தாட்ட அணியின் சிறந்த வீரர்கள்
15வயதுப்பிரிவு - சிவநேசன் அசோக்

17வயதுப்பிரிவு- உதயகுமார் குகதாஸ்
18வயதுப்பிரிவு - சிவபாதம் தயாளன்

*கரப்பந்தாட்ட அணியின் சிறந்த வீராங்கனைகள்
15வயதுப்பிரிவு- அசோதியா செல்வராசா
17வயதுப்பிரிவு- அகலிகா செல்வராசா

*தடகள நிகழ்வு (மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டியோர்)

| | | |
|---|---|---|
| *உயரம் பாய்தல் | 2ம் இடம் | துரைசிங்கம் தனுசன் |
| 1500m | 3ம் இடம் | வடிவேல் கோகுலதாஸ் |
| *குண்டுபோடுதல் | 3ம் இடம் | தவச்செல்வம் விஜயகாந் |

*உதைப்பந்தாட்டம்

| | | |
|---|---|---|
| 16வயதுப்பிரிவு | மாவட்டம் | 3ம் இடம் |
| | வலயம் | 1ம் இடம் |
| *18வயதுப்பிரிவு | வலயம் | 2ம் இடம் |

மென்பந்து துடுப்பாட்டம்

| | | |
|---|---|---|
| 19வயதுப்பிரிவு | வலயம் | 1ம் இடம் |

*வலைப்பந்தாட்டம்

| | | |
|---|---|---|
| 17வயதுப்பிரிவு | வலயம் | 1ம் இடம் |
| 19வயதுப்பிரிவு | வலயம் | 1ம் இடம் |

*கரப்பந்தாட்டம்

| | | |
|---|---|---|
| 15வயதுப்பிரிவு | வலயம் | 2ம் இடம் |
| 17வயதுப்பிரிவு | வலயம் | 1ம் இடம் |

*சதுரங்கம்

| | | |
|---|---|---|
| 19வயதுப்பிரிவு | வலயம் | 1ம் இடம் |

*உடற்பயிற்சிப் போட்டி (பெண்கள்)

| | | |
|---|---|---|
| | வலயம் | 1ம் இடம் |

2. தமிழ்த்தினப் போட்டி

தனிநடனம் - பிரிவு 2 வலயமட்டம் 3ம் இடம்
செந்தூரி கந்தசாமி

தனிநடனம் - பிரிவு 4 வலயமட்டம் 2ம் இடம்
சங்கீதா ஸ்ரீதரன்

கவிதையாக்கம்- பிரிவு 4 வலயமட்டம் 2ம் இடம்
ரேகா ரவீந்திரன்

பேச்சு - பிரிவு 4 வலயமட்டம் 1ம் இடம்
அருட்பிரகாசம் நிறோசன்

பேச்சு - பிரிவு 5 வலயமட்டம் 3ம் இடம்
கிரிசாந்தி கந்தவனம்

இலக்கணப்போட்டி - பிரிவு 5 வலயமட்டம் 3ம் இடம்
விஜிதா குலேந்திரன்

தனி இசை - பிரிவு 3 வலயமட்டம் 2ம் இடம்
அனுஸ்ரிகா விஜயரெத்தினம்

தனி இசை - பிரிவு 3 வலயமட்டம் 2ம் இடம்
விஜிதா இரத்தினம்

தனி இசை - பிரிவு 5 வலயமட்டம் 2ம் இடம்
இலட்சுமி எதிர்குலசிங்கம்

தனி இசை - பிரிவு 5 வலயமட்டம் 1ம் இடம்
அன்ரனற்றஜிதா லோசியஸ்

குழு இசை - குழு-1 வலயம் 1ம் இடம்

இலக்கணப் போட்டி - பிரிவு 4 - வலயமட்டம் 3ம் இடம்
தனுஷா தனபாலசிங்கம்

நாடகம் - பிரிவு 3 வலயமட்டம் 2ம் இடம்
பங்கு பற்றியோர்
கிரிஷா அரியபுத்திரன்
ஜெயதாசன் தஜேந்திரன்
பாலசுப்பிரமணியம் பிரசன்னா
சிவபாதம் வேளாங்கஜன்
நாராயணசாமி நிதர்சன்
கருணாகரன் பிரியலக்ஷன்
துர்ஷிகா துரை
மேர்ஜியா அன்ரன்
டயாளி கணபதி
பொன்னையா தயாளன்
வரதராஜா நிலுஜன்
சந்திரசேகரன் சுகிதரன்

வில்லுப்பாட்டு - வலயமட்டம் 3ம் இடம்

பங்குபற்றியோர்

| | |
|---|---|
| கிருஸ்ணராஜா உதயராஜ் | அருட்பிரகாசம் நிறோசன் |
| சிவபாதம் தயாளன் | கஜலக்சி இராசரத்தினம் |
| கனகசபை ஞானகரன் | அன்ரனற் றஜிதா அலோசியஸ் |

3. விஞ்ஞானப் போட்டி
விஞ்ஞான வினாடி வினா -
2005ம் - ஆண்டு

| | | |
|---|---|---|
| தரம் - 8 வலயமட்டம் | 1ம் இடம் | நாகேந்திரம் செந்தூரன் |
| தரம் - 9 வலயமட்டம் | 3ம் இடம் | அருட்பிரகாசம் நிறோசன் |

2006ம் - ஆண்டு

| | | |
|---|---|---|
| தரம் - 9 வலயமட்டம் | 3ம் இடம் | சிந்துஜா அருட்பிரகாசம் |
| தரம் - 10 வலயமட்டம் | 1ம் இடம் | அருட்பிரகாசம் நிறோசன் |
| வலயமட்டம் | 3ம் இடம் | பரஞ்சோதி விஸ்ணுகாந் |

2007ம் - ஆண்டு

| | | |
|---|---|---|
| தரம் - 9 மாவட்டமட்டம் | 2ம் இடம் | துரைசிங்கம் தனுசன் |
| தரம் - 10 வலயமட்டம் | 1ம் இடம் | அருட்பிரகாசம் நிறோசன் |

4. சமூகக்கல்வி தினம் - 2006

| | | |
|---|---|---|
| தரம் 6/7 வலயமட்டம் | 1ம் இடம் - | விவேகானந்தன் யதுர்ஷனன் |
| வலயமட்டம் | 2ம் இடம் - | ந கௌசீகன் |
| வலயமட்டம் | 3ம் இடம் - | கஜந்தினி சிவராசா |
| தரம் 12/13 வலயமட்டம் | 1ம் இடம் - | விஜிதா குலேந்திரன் |
| வலயமட்டம் | 2ம் இடம் - | துஷ்யந்தி சதானந்தயோகன் |
| வலயமட்டம் | 3ம் இடம் - | வக்சினி சூரியகுமார் |

## ஞாபகார்த்த புலமைப்பரிசில்கள் பெறுவோர் – 2007

♥ அமரர் இ. மருதையினார் நினைவு (தமிழ்த்துறை)
1. செல்வி கிஜாந்தி விஜயேந்திரன்

♥ அமரர் பொ. கேதாரநாதன் நினைவு (விஞ்ஞானத்துறை)
2. செல்வி தனுஷா தனபாலசிங்கம்

♥ அமரர் திருமதி சி. சொர்ணம்மா நினைவு (கணிதத்துறை)
3. செல்வன் தணிகாசலம் குகதாஸ்

♥ அமரர் அழகேஸ்வரி சமாதிலிங்கம் நினைவு (சமயத்துறை)
செல்வி கிரிசா அரியபுத்திரன்

♥ அமரர் ச. சிதம்பரபிள்ளை நினைவு (பொதுத்திறன்)
செல்வி கிருசாந்தி கந்தவனம்

♥ அமரர் சு. இரத்தினராசா நினைவு (சமூகக்கல்வி)
செல்வன் துரைசிங்கம் தனுசன்

♥ அமரர் பேராசிரியர் செ. பாலச்சந்திரன் நினைவு (புவியியல்)
செல்வி வக்ஷினி சூரியகுமார்

♥ அமரர் தம்பிப்பிள்ளை தம்பிஐயா நினைவு (கணித, விஞ்ஞானம்)
1. செல்வி யமுனா கந்தசாமி

விசேட புலமைப்பரிசில்

எமது பாடசாலை பழைய மாணவன் திரு. திருஞானம் றுஜேந்தன் அவர்களால் தரம் 11ல் கணிதம், விஞ்ஞான பாடத்தில் கூடிய புள்ளிகள் பெற்றவர்களுக்கு வழங்கப்படுவது.

கணிதம் - செல்வன் பரஞ்சோதி விஸ்ணுகாந்
விஞ்ஞானம் - செல்வன் அருட்பிரகாசம் நிறோசன்
English Day Competition

| | |
|---|---|
| ♠ Thanuja Thanabalasingam | - zonal level 2nd place - oretary |
| ♠ Kanagaratnam Mukunthakumar | - zonal level 2nd place - Dictation |
| ♠ Jeyakumar Jesinth | - zonal level 3rd place - Copy writing |
| ♠ Kiruththiga Kugarasa | - zonal level 3rd place - Copy writing |
| ♠ Vivekananthan Yathursanan | - zonal level 2nd place - Creative writing |

6. சித்திரம் தொடர்பான போட்டிகள்

சுனாமி தொடர்பான சித்திரப் போட்டி (தேசிய மட்டம்) - 2005

| | | |
|---|---|---|
| தி. விஜிதரன் | தரம் 11 | 1ம் இடம் |
| கு. சுபாஸ்கரன் | தரம் 11 | 1ம் இடம் |
| ர. மதுரன் | தரம் 10 | 2ம் இடம் |
| இ. சத்தியரூபி | தரம் 9 | 5ம் இடம் |

சிறுவர் ஓவியப்போட்டி (மாகாணமட்டம்) 2005

| | | | |
|---|---|---|---|
| அ. கிரிகரன் | தரம் 6 | பே. நிதர்சகுமார் 1ம் இடம் | |
| வி. யதுர்ஷனன் | தரம் 6 | இ. சத்தியரூபன் | தரம் 7 |
| ஜி. நிரோஜன் | தரம் 7 | இ. சத்தியரூபி | தரம் 7 |
| ஜி. நிரோஜன் | தரம் 7 | இ. சத்தியரூபன் | தரம் 9 |
| ந. கவிதரன் | தரம் 7 | க. தர்சிகன் | தரம் 8 |

தேசிய கல்வியியற் கல்லூரி சித்திரப் போட்டி (மாவட்ட மட்டம்) - 2005

| | | |
|---|---|---|
| க. பியதர்சன் | தரம் 11 | 3ம் இடம் |
| கு. சுபாஸ்கரன் | தரம் 11 | ஆறுதல் பரிசு |

♠ சிறுவர் மலர்ச்சி சித்திரப் போட்டி - 2005

| | | |
|---|---|---|
| க. தர்சிகன் | தரம் 8 | 1ம் இடம் |
| ர. மதுரன் | தரம் 10 | 1ம் இடம் |
| ந. கவிதரன் | தரம் 7 | 2ம் இடம் |
| நீ. நந்தகுமார் | தரம் 10 | 3ம் இடம் |

♠ வலயமட்ட சித்திர ஆக்கப் பொருட்காட்சி - 2005

| | | |
|---|---|---|
| இ. சத்தியரூபன் | தரம் 7 | 1ம் இடம் |

♠ தமிழர் புனர்வாழ்வுக் கழக ஓவியப் போட்டி - 2006 (வலய மட்டம்)

| | | |
|---|---|---|
| ந. கவிதரன் | தரம் 8 | 1ம் இடம் |
| ர. மருன் | தரம் 11 | 2ம் இடம் |
| நீ. நந்தகுமார் | தரம் 11 | 3ம் இடம் |
| ந. ஜெயதாஸ் | தரம் 12 | 1ம் இடம் |
| த. மயூரன் | தரம் 12 | 2ம் இடம் |

♠ பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம் சுவரொட்டிப் போட்டி - 2006 (மாவட்ட மட்டம்)

| | | |
|---|---|---|
| நீ. நந்தகுமார் | தரம் 11 | ஆறுதல் பரிசு |

♠ உலக உணவுத்திட்ட சித்திரப்போட்டி (வலய மட்டம்)-2006

| | | |
|---|---|---|
| ந. கவிதரன் | தரம் 8 | ஆறுதல்பரிசு |

♠ சர்வதேச அஞ்சல் தின கொண்டாட்டம் (மாவட்ட மட்டம்) - 2005

| | | |
|---|---|---|
| ந. ஜெயதாஸ் | தரம் 12 | ஆறுதல்பரிசு |
| ந. கவிதரன் | தரம் 8 | ஆறுதல்பரிசு |

♠ கூட்டுறவுத் திணைக்களத்தினரின் சுவரொட்டி போட்டி - 2006

| | | |
|---|---|---|
| ந. ஜெயதாஸ் | தரம் 12 | 1ம் இடம் |
| த. மயூரதன் | தரம் 12 | 3ம் இடம் |

♠ எயிட்ஸ் தொடர்பான சுவரொட்டி

தேசிய மட்டம் - 2006

| | | |
|---|---|---|
| ந. ஜெயதாஸ் | தரம் 12 | 2ம் இடம் |

வலய மட்டம் - 2007

| | | | |
|---|---|---|---|
| இ. சத்தியரூபன் | தரம் 9 | பே. நிதர்சகுமார் | தரம் 9 |
| ந. கவிதரன் | தரம் 9 | ஜி. நிரோசன் | தரம் 9 |
| த. மயூரதன் | தரம் 13 | ந. ஜெயதாஸ் | தரம் 13 |

கியூடெக் ஓவியப் போட்டி மாவட்ட மட்டம் - 2007

| | | |
|---|---|---|
| ந. கவிதரன் | தரம் 9 | 1ம் இடம் |
| ச. கோகுலன் | தரம் 9 | 3ம் இடம் |
| வி. அன்பழகன் | தரம் 7 | ஆறுதல் பரிசு |
| க. பியதர்சன் | தரம் 13 | 3ம் இடம் |

♠ " சிசுசவிய " உதவித்திட்டம் மூலம் உதவி பெறுவோர் (SEMP)

1. சண்ஜா சோமசுந்தரம்
2. அருட்பிரகாசம் நிறோசன்
3. இரட்சநாதன் அருள்ராஜ்
4. யமுனா கந்தசாமி
5. தனுசா தனபாலசிங்கம்
6. அகலிகா செல்வராசா
7. பிரியா கந்தசாமி
8. பத்மசிறி கனகரத்தினம்
9. தியாகராசா விஜிதரன்
10. கனகசபை ஞானகரன்
11. கிருஸ்ணராஜா உதயராஜ்

**த்வக அரிமாக்கழக அனுசரணையுடன் உதவி பெறுவோர்**

♠ டர்சினி கந்தசாமி(பல்கலைக்கழக கல்வி முடியும் வரை ச. சீவரத்தினம் சரவணாஸ் ஸ்ரோர்ஸ் அவர்கள் அனுசரணை வழங்குவார் சுப்பிரமணியம் சுகுமார் (பல்கலைக்கழக கல்வி முடியும் வரை மு. மகேந்திரன் அதிபர், கொழும்புத்துறை மகா வித்தியாலயம் அவர்கள் அனுசரணை வழங்குவார்)

ஜேர்மன் பிரஜை ஒருவரின் அனுசரணையுடன் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு வழங்க திரு. சி. பாலேந்திரனால் தொடர்புபடுத்தப்பட்டது.

வேணுஜா சோமசுந்தரம்.



K. Rasaih
(1982--1983)



M. Sivarajaratnam
(1983--1987)




S. Shanmuganathan
(1987--1989)




P. Ketharanathan
(1989--1993)



S. Kalatharan
(1993--1996)



K. Ganesalingam
( 1997 - 21.06.2002)





பரிசில்களைப் பெறுவதற்கு ஆவலுடன் அமர்ந்திருக்கும் மாணவச் செல்வங்கள் - 2004

பாரதி பதிப்பகம், காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம். T. P : 021 222 3081